بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*
*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*
*அவர்கள் 09.03.2018 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

**தஷஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களின் தியாகங்களின் தகுதி, அந்தஸ்துகள் மற்றும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய வெகுமதிகளைக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது எல்லாப் பொருள்களையும், வழங்கப்பட்டவற்றையும் அல்லாஹ்வின் வழியில் கொடுத்து விட்டார்கள். தாம் கம்பளியை உடுத்திக் கொண்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு எதனை வழங்கினான்? முழு உலகத்துக்கும் அரசராக்கினான். அவருடைய கைகளால் இஸ்லாத்தை மறுபடியும் உயிர் பெற வைத்தான். மார்க்கத்தை துறந்து விட்ட அரபு உலகத்தை மீண்டும் வெற்றி பெற்றுக் காட்டினார்கள். அவர்களுக்கு எதனை வழங்கினானோ அதற்கு அளவே இல்லை. சுருக்கமாக, அம்மக்களின் உண்மை, பற்று, களங்கமின்மை மற்றும் நன்றியுணர்வு ஆகியவை ஒரு முஃமினுக்கு பின்பற்றத்தக்க முன்மாதிரியாகும்.

சஹாபாக்களின் வாழ்வு எத்தகைய வாழ்வு எனில், எந்த நபிமார்களின் வாழ்விலும் அதற்கு இணையான ஒன்றை பார்க்க முடியாது. அசல் விஷயம் என்னவென்றால், எதுவரை மனிதன் தனது ஆசைகள் மற்றும் நோக்கங்களை விட்டுப் பிரிந்து இறைவனிடம் வரவில்லையோ அவர் எதனையும் பெறுவதில்லை. இன்னும் சொல்வதாயின், அவர் தமக்கே சேதம் ஏற்படுத்திக் கொள்கிறார். அவர் தமது எல்லா மன ஆசைகள் மற்றும் நோக்கங்களை விட்டும் தனித்து வெறும் கையுடன் தூய்மையான உள்ளத்துடன் இறைவனின் முன் செல்வார் எனில் இறைவன் அவருக்கு வழங்குகின்றான். இறைவன் அவருக்கு உதவி செய்கிறான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், மனிதன் மரணிக்க தயாராகி விட வேண்டும். அவனது வழியில் இழிவு மற்றும் மரணத்தை வரவேற்பவராக ஆகி விடவேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: பாருங்கள்! உலகம் அழியக்கூடிய ஒன்றாகும். நிரந்தரமாக இதில் எவரும் இருக்க மாட்டார். ஆனால், இறைவனுக்காக அதனை விட்டு விடுபவருக்கே அதன் ரசனையும் கிடைக்கின்றது. இதன் காரணமாக அம்மனிதர் இறைவனது நெருக்கத்திற்குரியவராக ஆகிறார். இறைவன் அவருக்காக உலகை ஏற்கச் செய்கிறான். அதுவும் எத்தகைய ஏற்புடைமையை அவருக்கு வழங்குகிறான் எனில், அதை பெறுவதற்காக உலகம் எவ்வளவு முயல்கிறது எனில், ஏதாவது பட்டம் கிடைக்க வேண்டும் அல்லது கண்ணியத்திற்குரிய இடத்தில் அரசவையில் இடம் கிடைக்க வேண்டும். அரசவைக்குரியவற்றில் தம் பெயரும் எழுதப்பட வேண்டும் என்று நினைக்கின்றனர். ஆக உலகின் எல்லா கண்ணியங்களும் அவருக்கு வழங்கப்படுகிறது. எல்லா உள்ளங்களிலும் அவர் மீது ஓர் ஏற்புத்தன்மையும் கண்ணியமும் ஏற்படுகிறது. ஏனென்றால், அவர்கள் இறைவனுக்காக எல்லாவற்றையும் விட்டு விடவும், இழக்கவும் ஆயத்தமாகி இருந்தனர். ஆயத்தமாக இருந்தது மட்டுமின்றி விட்டு விடவும் செய்தனர். ஆகவே, இறைவனுக்காக எல்லாவற்றையும் இழந்தவருக்கு எல்லாம் தரப்படுகிறது.

அன்னார் கூறினார்கள்: உலகியல் அரசுகளுக்காக சிறிது இழந்தாலம் அவருக்கு அதற்காக கூலி கிடைக்கிறது. உலகத்தில் பாருங்கள்! நீங்கள் ஏதாவது செய்தால் அதற்காக பலன் கிடைக்கிறது. நீங்கள் இறைவனுக்காக இழந்தால் அதற்கான கூலி கிடைக்காதா? அவர் இழந்ததை விட பன்மடங்கு அதிகமாக பெறாத வரை அவர் மரணிப்பதில்லை. இறைவன் எவரது கடனையும் தன்னிடமே வைத்துக் கொள்ள மாட்டான். ஆனால் ஆதங்கம் என்னவெனில், இதனை ஏற்பவர் இதனைப் பற்றி தெரிந்தவர் மிகவும் குறைவாகவே உள்ளனர். இந்த உண்மை, பற்று, களங்கமின்மை மற்றும் நன்றியுணர்வை கடைபிடித்தவரின் முன்மாதிரி நமக்கு எந்த அளவுக்கு மதிப்புடன் தென்படுகிறது எனில், மனிதன் வியந்து போகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய்மையாக்கும் ஆற்றல் அவர்களின் நேசத்தின் திசையை மட்டும் மாற்றவில்லை. முதலில் அவர்களின் நேசம் வேறு பக்கம் இருந்தது. அதனை இன்னொரு பக்கம் திருப்பினார்கள். அதாவது உலகை விட்டு இறைவன் பக்கம் திருப்பினார்கள். மாறாக, அந்த அன்பின் தரத்தை எவ்வளவு உயர்த்தினார்கள் என்றால், அதற்கான ஓர் ஈடிணை உலகில் முன்னர் கிடைக்கவே இல்லை.

இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் உதாரணம் தந்து விளக்குகிறார்கள்: அவர்களின் அன்பின் தரம், தியாகம், முற்கால நபிமார்களின் வாழ்வில் கூட காணப்பட்டதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களோ எல்லா மன எழுச்சிகளிலிருந்தும் தூய்மையாக இருந்தார்கள். தூய உள்ளத்துடன் அல்லாஹ்வுக்காக களங்கமற்ற நிலையில் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காகவே வாழ்வைக் கழிப்பவர்களாக இருந்தனர். இந்த நிலையில் இருந்ததால் இறைவனும் அவர்களுக்கு தனது அருளை வழங்குகிறான். அளவில்லாமல் வழங்குகிறான். நாம் சஹாபாக்களின் வாழ்வில் இதனை பார்க்கிறோம்.

சஹாபாக்கள் எவ்வாறு தமது நட்பை இறைவனுக்குக் கீழ் கொண்டு வந்தார்கள் என்று காட்டுவதற்காக சில சஹாபாக்களின் வாழ்வை எடுத்து வைக்கிறேன். அவர்கள் என்ன முன்மாதிரியைக் காட்டினார்கள் என்று எடுத்து வைக்கிறேன்.

ஹஸ்ரத் அபாது பின் பஷர் என்று ஒரு அன்ஸாரி சஹாபி இருந்தார். நல்ல இளமைக் காலத்தில் தமது **35** வயதில் அவருக்கு ஷஹாதத் கிடைத்தது. அவரது இறைவணக்கம் மற்றும் திருக்குர்ஆன் ஓதுதல் எவ்வாறிருந்தது என்பதை காட்டும் ஒரு சம்பவத்தைக் கூறியவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி அவர்கள் கூறினார்கள்: ஓர் இரவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுவதற்காக எழுந்தார்கள். மஸ்ஜிதில் இருந்து திருக்குர்ஆன் ஓதும் சப்தம் வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுவதற்காக மிகவும் சீக்கிரம் எழக் கூடியவர்களாக இருந்தார்கள். அன்னார் எழுந்து இந்த குரல் அபாது உடைய குரலா? என்று கேட்டார்கள். அவர் குரல் மாதிரிதான் தெரிகிறது என்று ஹஸ்ரத் ஆயிஷா கூறினார்கள். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வே! அபாது மீது கருணை காட்டுவாயாக என்று அவருக்காக துஆ செய்தார்கள்.

இவர்கள் எத்தனை நற்பேறு பெற்றவர்கள்! அவர்கள் தமது இரவுத் தொழுகைகள் மற்றும் திருக்குர்ஆன் ஓதுதல் மூலமாக அதில் இரவைக் கழித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய துஆவை நேரடியாகப் பெறுபவர்களானார்கள். இரவில் எழுந்து அல்லாஹ்வை திருப்திப்படுத்துவதற்காகவும் அவனது ரஹ்மத்தைப் பெறுவதற்காகவும் அழைக்கின்ற ஹஸ்ரத் அபாதுக்கு ஒரு கனவின் மூலமாக தமக்கு ஷஹாதத்தின் பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரி கூறுகின்றார். ஹஸ்ரத் அபாது ஒருமுறை என்னிடம் கூறினார்கள்: நான் கனவில் பார்த்தேன். வானம் பிளக்கிறது. நான் அதற்குள் செல்கிறேன். பிறகு அது மூடிக் கொண்டது. பழைய நிலைக்கு வந்தது. இந்த கனவிலிருந்து அல்லாஹ் எனக்கு ஷஹாதத்தின் பதவியை வழங்குவான் என்ற உறுதி ஏற்பட்டது.

அன்னாரின் இந்த கனவு ஜமாமா போரில் நிறைவேறியது. அன்னார் மிகவும் தைரியமாக போரிட்டவாறு ஷஹாதத்தைப் பெற்றார்கள். எதிரிகளுடன் போரிட்டதன் மூலம் அன்னாருடன் இருந்த எல்லா சஹாபாக்களுக்கும் வெற்றி கிடைத்தது. ஆனால் அவர்கள் சஹீதானார்கள். அபூ ஸயீது கூறுகிறார்: போருக்குப் பிறகு அன்னாரது முகம் வாள் காயங்களால் கண்டறிய முடியாதவாறு ஆகி விட்டது. அவரது உடலிலுள்ள ஓர் அடையாளத்தை வைத்து அறியப்பட்டார்கள்.

பிறகு, வரலாறு நமக்கு இன்னொரு சஹாபி பற்றி கூறுகிறது. அவர் பெயர் ஹராம் பின் மல்ஹான் ஆகும். இந்த இளைஞர் மற்றவர்களுக்கு குர்ஆன் ஓதிக் கொடுப்பதற்கும் திண்ணைத் தோழர்களுக்கு பணிவிடை செய்வதற்கும் முன் நிற்பவராக இருந்தார். பனூ ஆமிரின் ஒரு குழு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து தமது மக்களுக்கு தப்லீக் செய்வதற்காக சிறு குழுவை அனுப்புமாறு கேட்டது. அதன் மூலம் நாங்கள் இஸ்லாம் பற்றி தெரிந்து கொள்கிறோம் என்றனர். எங்கள் மக்கள் இஸ்லாத்தில் நுழைவதற்காக எங்களிடம் அனுப்புங்கள் என்றனர். இவர்களின் எண்ணம் தீயதாக இருந்தது. ஆனால் இவ்வாறு கோரிக்கை வைத்தனர். இவர்கள் நம்பத்தகுந்தவர்களாக இருக்கவில்லை. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாம் அனுப்பினால் உங்களால் அவர்களுக்கு எதுவும் ஆபத்து ஏற்படும் என்ற பயம் உள்ளது என்று கூறினார்கள். அவர்களின் தலைவர் விஷயங்களைக் கேட்டு விட்டு முஸ்லிம் ஆகவும் இல்லை. நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். எனது அடைக்கலத்தில் வரக்கூடியவர்கள் இருப்பார்கள் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பெரும் குழுவை பனூ ஆமிரிடம் அனுப்பினார்கள். ஹராம் பின் மல்ஹானை அக்குழுவின் தலைவராக நியமித்தார்கள். அந்த குழு அங்கு சென்றதும் ஹஸ்ரத் ஹராம் பின் மல்ஹானுக்கு சந்தேகம் எழுந்தது. ஏதோ பிரச்சனை இருக்கும் என்று தோன்றியது. தூரத்திலிருந்து ஒன்றும் தெரியவில்லை. அம்மக்களது எண்ணம் தூயதாக இருக்கவில்லை.

எனவே, அன்னார் தம்முடன் இருந்தவர்களிடம், கூறினார்கள்: எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எல்லாரும் ஒன்றாக அங்கு போகக் கூடாது. எல்லாரையும் அவர்கள் சூழ்ந்து கொண்டால் ஒரே நேரத்தில் நஷ்டம் இழைத்து விடுவார்கள். எனவே, எல்லாரும் இங்கிருங்கள். நானும், என்னுடன் ஒருவர் மட்டும் போகிறோம். எங்களுடன் அவர்கள் நன்றாக நடந்து கொண்டால் நீங்களும் வாருங்கள். எங்களுக்கு அவர்கள் தீங்கிழைத்தால் நீங்கள் நிலைமைகளுக்கு ஏற்ப முடிவு செய்யுங்கள். திரும்பிச் செல்வதா? அல்லது இவர்களுடன் சண்டையிடுவதா? அங்கு தங்குவதா? என்று நிலைமைக்கு ஏற்ப நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள். ஹராம் பின் மல்ஹான் மற்றும் அவர்களுடன் ஒருவரும் அம்மக்களை சென்று அடைந்ததும் பனூ ஆமிரின் தலைவர் ஒருவருக்கு சைகை செய்தார். உடனே அம்மனிதர் பின்னால் இருந்து மல்ஹானை ஈட்டியால் தாக்கினான். அவர்களின் கழுத்தில் இருந்து இரத்தம் கொட்டியது. அன்னார் அதனை தமது கைகளில் ஏந்தியவாறு, கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன் என்று கூறினார்கள். பிறகு உடன் இருந்த சஹாபியையும் ஷஹீதாக்கினார்கள். பிறகு தொடர்ந்து சண்டையிட்டு அந்த **70** பேரையும் ஒன்றிரண்டு பேரைத் தவிர அனைவரையும் ஷஹீதாக்கி விட்டனர். இம்மக்களை அநியாயமாக ஷஹீதாக்கப்படும்போது, அவர்கள் துஆ செய்தனர். எங்களது தியாகத்தை ஏற்றுக் கொள்வாயாக. எங்களது இந்த நிலைமையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவித்து விடுவாயாக. ஏனெனில் இங்கிருந்து செய்தியைத் தெரிவிக்க வழியில்லை. எனவே அல்லாஹ் ஹஸ்ரத் ஜிப்ரீல் மூலமாக ஸலாமைக் கொண்டு சேர்த்தான். அவர்களின் ஷஹாதத் செய்தியையும் தெரிவித்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாகளுக்கு அந்த

செய்தியைத் தெரிவித்தார்கள். இந்த ஷஹாதத்தினால் அன்னார் மிகவும் துக்கம் அடைந்தார்கள். **அன்னார் 30 நாட்கள் வரை அந்த கோத்திரத்தாருக்கு எதிராக துஆ செய்தார்கள். இந்த அநீதி இழைத்தவர்களை அல்லாஹ்வே நீயே பிடிப்பாயாக என்று துஆ செய்தார்கள்.** இந்த ஷஹாதத்துகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெரும் ஷஹாதத் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அம்மக்களின் மார்க்கப் பற்று, தியாகம் பற்றி குறிப்பிடும்போது ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: அன்பு எத்தகைய ஒரு பொருள் எனில் அது எல்லாவற்றையும் செய்ய வைக்கிறது. ஒரு மனிதர், ஒருவர் மீது நேசம் கொள்கிறார் எனில் நேசிக்கப்பட்ட அம்மனிதருக்காக என்னவெல்லாம் செய்கிறார்? பிறகு சிந்தித்துப் பாருங்கள். ஒருவர் இறைவனின் அன்புக்காக கஷ்டப்பட்டால், அவனது சன்னிதானத்தைப் பெறுவதற்காக விரும்புகிறார் எனில் அதற்காக அனுபவிக்கிற கஷ்டங்களில் எத்தனை ரசனைகளைப் பெற முடியும்? அவர்கள் கூறுகின்றார்கள்: எல்லா சஹாபாக்களுக்கும் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) உடைய நிலைமைகளைப் பாருங்கள். அவர்களுக்கு என்னென்ன கஷ்டங்களெல்லாம் மக்காவில் இருந்தன. சிலர் பிடிக்கப்பட்டனர். விதவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆண்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். பெண்களுக்குக் கூட என்னென்ன கடுமைகள் காட்டப்பட்டன. அதனை நினைக்கும்போது உடல் சிலிர்த்து விடுகிறது. அவர்கள் மக்காவாசிகளைச் சந்திக்கும்போது வெளிப்படையில் மிகவும் மரியாதை கொடுத்தனர். ஏனெனில் அவர்கள் அவர்களின் உறவினர்கள்தான். பிறகு அவர்களை இந்த அளவுக்கு கஷ்டங்களில் இடுவதற்கு என்ன காரணம் இருந்தது? அவர்கள் உண்மையில் நிலைத்து நின்றனர். அந்த ரசனையும் ஈர்ப்பும்தான் அன்பின் மீது கொண்ட நேசத்தின் காரணத்தால் அவர்களின் நெஞ்சிலிருந்து அது வெளி வந்தது.

பிறகு அன்னார் ஓர் உதாரணம் தந்தவாறு கூறினார்கள்: ஒரு சஹாபியின் கை வெட்டப்பட்டது. நான் துஆ செய்கிறேன். தலை வெட்டப்பட்டது. அவர் சஜ்தா செய்தார். இதனைக் கூறி விட்டு அவர் இறந்து விட்டார் என்று கடைசியில் எழுதப்பட்டுள்ளது. அவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிவித்து விடுவாயாக என்று துஆ செய்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்போது மதீனாவில் இருந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் சென்று அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். அன்னார் வ அலைக்கும் ஸலாம் என்று கூறினார்கள். அவர்களுக்கு இந்த சம்பவம் குறித்து தகவல் தெரிய வந்தது. பிறகு கூறுகின்றார்கள்: இறைவனிடம் கிடைக்கும் ரசனை எத்தகையது என்றால் அதற்காக ஒரு புழுவைப் போன்று நசுங்கி சாவதும் கூட சம்மதம்தான். அந்த சஹாபி கஅபாவின் ரப் –ஐ பெற்று விட்டேன் என்று கூறியது போன்று அது அளவற்ற நேசமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: கடுமையிலும் கடுமையான கஷ்டம் கூட ஒரு முஃமினுக்கு எளிதாகவே தென்படுகிறது. உண்மையாகக் கேளுங்கள். ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமும் அதுதான். அவர் கொல்லப்படுவதற்கும் தயாராக இருக்கிறார். அதுபோன்று ஒரு மனிதருக்கு நீர் கிறித்தவர் ஆகி விடு அல்லது கொலை செய்யப்படுவாய் என்று கூறப்பட்டால் அவரது நஃப்ஸிடமிருந்து என்ன ஓசை எழுகிறது எனப் பார்க்க வேண்டும். அவர் மரணிப்பதற்காக தலையை வைப்பாரா? அல்லது கிறித்தவராவதற்கு முன்னுரிமை வழங்குவாரா? அவர் மரணிப்பதற்கு முன்னுரிமை வழங்கினால் அவர் உண்மையான முஃமின் ஆவார். ஆகவே இதுபோன்ற துன்பங்கள் முஃமினுக்கு வருகின்றன. உள்ளுக்குள்ளேயே அதில் ஓர் இன்பம் இருக்கிறது. சிந்தித்துப் பாருங்கள். அதில் ஓர் இன்பம் இல்லையென்றால் நபிமார்கள் நீண்ட காலம் அந்த கஷ்டத்தை எப்படி அனுபவித்தனர்?

இங்கு சஹாபாக்களின் முன்னுதாரணத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய்மையாக்கும் ஆற்றல் எத்தகைய உயிரை ஊதியது என்றால், அவர்கள் மரணிக்கும்போது கூட நாம் கேட்டது போன்று கஅபாவுடைய இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன் என்ற கூறி வந்தனர். நாங்கள் இறைவனை பெற்று விட்டோம். ஆனால் இவர்கள் நன்மை செய்பவர்கள். இவர்கள் மீது அநீதியிழைக்கப்பட்டது. அந்த அநீதிக்குட்பட்டு தியாகம் செய்தனர். அவர் தாமே அநீதியிழைத்து விட்டு, தற்காலத்தில் சிலர் கூறுவது போன்று நாங்கள் ஷஹீதாகிறோம். ஷஹீதாவோம். ஜன்னத்திற்கு சென்று விடுவோம் என்று கூறுவது போன்று மக்கள் அல்ல அவர்கள். சஹாபாக்கள் அநீதிக்கு எதிராக யுத்தம் செய்பவர்கள். அநீதியிழைப்பவர்களாக இருக்கவில்லை.

அடுத்து அப்துல்லாஹ் பின் அம்ர் ஒரு அன்ஸாரி சஹாபி இவர்களைப் பற்றி இவ்வாறு அறிவிப்பு வருகிறது. இவர் யுத்தத்திற்குச் செல்லும்போது தனது மகனிடம் கூறினார்: எல்லாருக்கும் முதலில் எனக்கு ஷஹாதத் கிடைக்கும். ஒருவேளை அவர் கனவில் கண்டிருக்கலாம். இறைவன் கூறியிருக்கலாம். அவர்கள் கூறினார்கள்: எனது மரணத்திற்குப் பிறகு நீர் உமது சகோதரிகளை கவனித்துக் கொள்ள வேண்டும். அவருக்கு பெண் மக்கள் இருந்தனர். ஒரு யூதரிடமிருந்து நான் கடன் வாங்கியுள்ளேன். எனது கடனை எனது பேரீத்தம்பழத் தோட்டத்திலிருந்து வரும் வருமானத்தில் இருந்து தர வேண்டும். இதுவே அல்லாஹ்வின் மீது அன்பும் தக்வாவும் தூய்மையும் உரிமைகளை வழங்குதலும் உடைய தரமாகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களுடைய ஷஹாதத் மற்றும் அவர்களது தியாகம் எவ்வாறு இருந்தது அல்லாஹ் எவ்வாறு அருள் புரிந்தான் என்பது இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் உடைய மகனுக்கு அவரது தந்தைக்காக இரங்கல் தெரிவித்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் உமக்கு ஒரு சந்தோஷமான செய்தியை கூறுகிறேன். அல்லாஹ் உமது தந்தையை தன் அருகில் அமர்த்தினான். ஷஹாதத்துக்குப் பிறகு நீர் என்ன விரும்புகிறீர் என்பதனை கேளுங்கள் நான் தருகிறேன் என்று ரப் கூறினான். உமது தந்தை கூறினார். இறைவா நான் அடியானாக இருப்பதற்குரிய உரிமையை செலுத்தவில்லை. உன்னிடம் எந்த முகத்துடன் நான் கேட்பேன்? அவர்களின்

தியாகத்தின் தரம், கிலாபத்தின் தரம் எவ்வாறு இருந்தது? இருந்தும் இறைவா நான் ஓர் அடியானாக இருப்பதன் உரிமையை செலுத்தவில்லை என்று கூறினார். எந்த முகத்தோடு நான் கேட்பேன் என்றான். உனது அருளினால் நீ வழங்குவாயாக. அல்லாஹ்வே நான் எனது விருப்பத்தை கூறியே ஆக வேண்டும் எனில் எனது விருப்பம் என்னை உலகிற்கு மீண்டும் அனுப்பு. நான் மீண்டும் உனது நபியுடன் சேர்ந்து எதிரிகளுடன் சண்டையிடுவேன். பிறகு ஷஹீதாகி வருவேன். அல்லாஹ் கூறினான். நான் ஒருவருக்கு மவ்த்தை கொடுத்து விட்டால் அவர்களை மீண்டும் உலகிற்கு அனுப்புவதில்லை என்று முடிவு செய்து விட்டேன். எனவே உம்முடைய அந்த ஆசை நிறைவேற முடியாது என்றான். பிறகு அல்லாஹ் நாவினால் அவருக்கு ஷஹீதுடைய எல்லா அந்தஸ்துகளும் வழங்கப்படும் என்று கூறினார்கள்.

உணர்வு மற்றும் ஷஹாதத் பற்றி வருகிறது. ஹஸ்ரத் அம்ர்தனது காலில் இருந்த கஷ்டத்தினால் நொண்டி நொண்டி நடந்து கொண்டிருந்தார். எனவே அவரது மகன் அவரது இயலாமை காரணத்தால் பத்ர் போரில் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை. பிறகு உஹது வாய்ப்பு வந்தது. காஃபிர் முஸ்லிம்கள் மீது தாக்குவதற்காக வந்தனர். அப்போது இவர் தனது மகனிடம் கூறினார். நீ என்னவேண்டுமோ செய். நான் உன் சொல்லை கேட்கப் போவதில்லை. இந்தபோரில் நான் கண்டிப்பாக கலந்து கொள்ளவே செய்வேன் என்றார். இந்த வகையில் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார். எனது காலின் கஷ்டம் காரணத்தால் யுத்தத்தில் கலந்து கொள்வதில் இருந்து எனது மகன் என்னை தடுக்கிறான். ஆனால் நான் உங்களுடன் இந்த போரில் கலந்து கொள்ள விரும்புகிறேன். இறைவன் மீது ஆணையாக! எனது உள்ளத்து ஆசையை அல்லாஹ் நிறைவேற்றுவான் என்று நம்புகிறேன். அல்லாஹ் எனக்கு ஷஹாதத்தை வழங்குவான். நான் எனது நொண்டி காலின் காரணமாக சொர்க்கத்தில் நுழைவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஊனத்தின் காரணத்தால் உம்மீது ஜிஹாத் கடமையில்லை. ஆனால் இது உமது விருப்பமாக இருக்கும் எனில் நீர் கலந்து கொள்ளும் என்றார்கள். அவரது மகனிடம் கூறினார்கள். இவரை கலந்து கொள்ள விடு. இந்த வகையில் ஹஸ்ரத் அம்ர் யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். அல்லாஹ்வே எனக்கு ஷஹாதத் வழங்கு; என்னை இயலாதவனாக தோற்றவனாக வீட்டுக்கு திரும்ப வைக்காதே என்று துஆ செய்தார். பிறகு இவரது விருப்பம் யதார்த்தத்தில் நிறைவேறியது. அவர் உஹது மைதானத்தில் ஷஹீது ஆனார்.

ஆக மக்கள் ஈமானில் உயர்ந்தவர்கள். நிச்சய உறுதியில் மேம்பட்டவர்கள். எந்த ஒரு சபையின் சம்பவத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். களங்கமின்மை பற்றி இறைவனுக்காக அர்ப்பணித்தல் ஆகியவற்றுக்கு எப்போதும் தயாராக இருந்தது. ஹஸ்ரத் அபூ தல்ஹா ஓர் அன்ஸாரி சஹாபி இவர் அம்பு எறிவதில் புகழப்பட்டவராக இருந்தார். இவர் பத்ர் போரில் அம்பு எய்திவதில் மிகவும் வீரத்தை வெளிப்படுத்தினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். அபூ தல்ஹாவின் முன் அம்புகளை போடுங்கள். ஏனெனில் அவர் மிகவும் வேகமாக அம்பு விடுபவராக இருந்தார். அவர் குறி பார்த்து எறிவதில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். உஹது போரில் ஹஸ்ரத் அபூ தல்ஹாவுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன் கேடயமாக நிற்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் தமது கைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகத்தின் முன் வைத்துக் கொண்டு நின்ற இந்த அன்ஸாரி ஆவார். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) முன் நின்று மிகவும் தைரியத்துடன் தனது வீரத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பு பெற்றவர். பயமின்றி மிகவும் ஆபத்தான இடத்தில் நிற்பதற்கு முன்னுரிமை தருபவராக இருந்தார்கள். எனவே இஸ்லாத்தை அழிக்க நினைத்த எதிரிகள் நின்றார்கள். அநீதி இழைப்பதற்காக சண்டையிடவில்லை. மாறாக எதிரிகள் தாக்கியபோது கோழைத்தனம் காட்டாமல் வீரத்துடன் முன் நின்றார்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தமது எல்லா திறமைகளையும் பயன்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தரப்பில் இருந்து தெரிய வருகிறது அவ்வாறே நடக்கிறது. காரணிகள் ஒன்றும் இல்லை. அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் என் வழியில் செல்லும் போது முராகமன் கஸீராவைப் பெறுவீர்கள். உண்மையான எண்ணத்துடன் அடி எடுத்து வைத்தால் இறைவன் அவருடன் இருப்பான். மனிதன் நோயுற்றால் அவரது நோய் அகன்று விடுகிறது. சஹாபாக்களைப் பாருங்கள். உண்மையில் சஹாபாக்களின் நிலை எத்தகையது எனில் எல்லா நபிமார்களின் முன்மாதிரி போன்றது. அல்லாஹ்வுக்கு செயல்தான் பிடித்தமானது. அவர்கள் ஆடுகளைப் போன்று தமது உயிரைத் தந்தனர். அவர்களின் உதாரணம் எத்தகையது எனில் நுபுவ்வத்தின் மகத்துவம் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களிடம் இருந்து ஆரம்பிக்கிறது. கூறப்படுகிறது நம்முடைய மார்க்க நூல்களில் இருந்து தெரிய வருகிறது. ஆனால் சஹாபாக்கள் அதனை ஒளிமிக்கதாக மின்ன வைத்துக் காட்டினார்கள். அதன் அறிவுப் பகுதியை மட்டும் அவர்கள் காட்டவில்லை. மாறாக அமல் மூலம் மின்னச் செய்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: பற்று என்றால் என்னவென்று காட்டினார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய நிலையை கேட்காதீர்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை ஒருவரும் விற்று விடவில்லை. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை அவரது சீடர் 30 ரூபாய்களுக்கு விற்று விட்டார். திருக்குர்ஆனில் இருந்து தெரிய வருகிறது. **ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய சீடர்களுக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது சந்தேகம் இருந்தது.** அதனால் தான் உணவுத் தட்டு கேட்டனர். னஅஸ மஅன்க ஸதக்தனா அதாவது உமது உண்மை அல்லது பொய் நிரூபணம் ஆவதற்காக இதிலிருந்து தெரிய வருகிறது. உணவுத் தட்டு இறங்கும் வரை அவர்களின் நிலை னஅஃலமு –வாக இருந்ததில்லை. பிறகு எந்த அளவு நிம்மதியற்று வாழ்ந்தார்கள் எனில் அதற்கு முன் உதாரணமே இல்லை.

ஆனால் கண்ணியத்துக்குரிய சஹாபாக்களின் கூட்டம் மிகவும் வியக்கத்தகு கூட்டம் ஆகும். மதிப்புக்கும் உரியதும், பின்பற்றத்தக்கதும் ஆகும். அவர்களின் உள்ளம் திட உறுதியினால் நிறைந்து இருந்தது. திட உறுதி இருந்தால் பிறகு உள்ளம் பொருளை தர விரும்புகிறது. பிறகு அதிகரிக்கும் போது அந்த நிச்சய உறுதி இறைவனுக்காக உயிரை தரவும் தயாராகி விடுகிறது. இந்த யகீன் (நிச்சய உறுதி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய்மையாக்கும் ஆற்றலின் காரணத்தால் எப்போதும் அதிகமாகிக் கொண்டே சென்றது. அந்த சஹாபாக்களின் அன்றாட வாழ்வும் கூட ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது பேரன்பால் நிறைந்து இருந்தது. நமது அன்பை வெளிப்படுத்த என்ன வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்து அதற்காக முயற்சிக்கப்பட்டது.

ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூ உடைய மகன் முதலில் முஸ்லிம் ஆகி விட்டார். தந்தை இணை வைப்பவராக இருந்தார். தந்தையாருக்கு தப்லீக் செய்ய வழி தெரியவில்லை. ஏற்கமாட்டேன் என்றார். பிறகு மகன் ஒரு வழியைக் கண்டுபிடித்தார். தந்தை ஒரு பெரிய சிலையை வீட்டில் அலங்கரித்து வைத்திருந்தார். இவர் அதனை தூக்கி குப்பை பள்ளத்தில் எறிந்து விட்டார். அம்ர் பின் ஜமூ அதனை தேடி எடுத்து வந்து மீண்டும் வீட்டில் வைத்தார். கோபத்துடன் எனது சிலையை இவ்வாறு செய்தவர் யார் என்று தெரிந்தால் அவருக்கு பெரும் தண்டனை கொடுப்பேன் என்றார். மறுநாள் மகன் தனது தந்தை சிலையை அதேபோன்று மீண்டும் செய்தான். தமது சில ஒரு பள்ளத்தில் கிடப்பதைப் பார்த்தார். கடைசியில் ஒருநாள் அம்ர் அந்த சிலையை நன்றாக சுத்தம் செய்து பக்கத்தில் ஒரு வாளை வைத்து விட்டார். அந்த சிலையிடம் கூறினார். உன்னுடன் இப்படி நடந்து கொள்வது யார்? என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் உன் அருகிலேயே ஒரு வாளை வைத்து விட்டேன். இனி நீயே உன்னை பாதுகாத்துக் கொள்ளலாம். மறுநாள் பார்க்கிறார். சிலயை காணவில்லை. தேடிப் பார்த்த போது ஒரு குப்பைகளின் குவியலில் ஒரு இறந்த நாயினை கட்டிக் கொண்டு கிடந்தது. அம்ர் இதனைப் பார்த்து யோசனையில் ஆழ்ந்தார். நான் இறைவனாக்கி வைத்துள்ள இந்த சிலலைக்கு இவ்வளவு தைரியம் இல்லை. அருகில் ஒரு வாள் இருந்தும் தன்னை பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. பிறகு இது என்னை எங்கே காப்பாற்றப் போகிறது?

பிறகு அவர் அந்த சிலையைப் பார்த்து கூறினார்கள்: நீ உண்மையான இறைவனாக இருந்தால் நீ நாயின் மிக உயர்ந்த மேலான அல்லாஹ்வை புகழ்கிறேன். அவனே உணவு அளிப்பவனும் நீதி வழங்குபவனும் ஆவான். கூறப்படுகிறது. அன்ஸார்களில் எல்லாருக்கும் இறுதியில் இஸ்லாத்தை ஏற்றவர் அம்ர் பின் ஜமூவாக இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களுக்கு இருந்த அன்பு அன்னாரின் தூய்மையாக்கும் ஆற்றல் காரணத்தால் நேரடியாக சில நேரத்தில் கிடைத்தது. அல்லது அவர்கள் மூலமாக கிடைத்தது.

இதன் மூலமும் சஹாபாக்களின் தகுதி அந்தஸ்தை விளங்க முடியும். ஹஸ்ரத் உபை பின் கஅப் உடைய இறைத் தொடர்பு தனித்துவம் வாய்ந்தது. புகாரியில் ஒரு ரிவாயத். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவரிடம், இறைவன் என்னிடம் உன்னிடம் குர்ஆன் ஓதச் சொல்லி கேட்குமாறு இறைவன் என்னிடம் கூறினான் என்றார்கள். ஹஸ்ரத் உபை இப்னு கஅப் வியப்புடன் கேட்டார்கள். அல்லாஹ் என் பெயரை கூறினானா? அனைத்துலகிற்கும் எஜமானனாகிய அந்த இறைவனா என் பெயரைச் சொல்லி என் இடம் குர்ஆன் குர்ஆன் ஓதுமாறு கூறினானா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆம். உம் பெயரைச் சொல்லிதான் கூறினான். உடனே உபை பின் கஅப் உணர்ச்சிவசப்பட்டு அழுதார்கள். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் லம் யகுனில்லதீன கஃபரூ என்ற சூராவை அதாவது சூரத்துல் பய்யினாவை ஓதிக் காட்டினார்கள். ஒருவர் பிறகு உபை பின் கஅப் இடம் கேட்டார். நீர் அதனைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து போயிருப்பீரே? அன்னார் கூறினார்: அல்லாஹ் உடைய அருள்களைப் பார்த்து அதனை நினைத்து மகிழ்ச்சி அடையுங்கள் என்று இறைவன் கூறுகிறான். பிறகு நான் சந்தோஷமடைய மாட்டேனா?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் சஹாபாக்களைப் பற்றி கூறினார்கள்: கண்ணியத்திற்குரிய சஹாபாக்களின் காலத்தைப் பார்த்தால் அவர்கள் மிகவும் எளிமையும் சாதாரணமாகவும் இருந்தனர். ஒரு பாத்திரம் ஈயம் பூசப்பட்டு சுத்தமாக இருப்பது போன்று அவர்களின் உள்ளம் இருந்தது. அது இறை வார்த்தையினால் ஒளி பெற்று மன எழுச்சிகளிலிருந்து முற்றிலும் தூய்மையாக இருந்தது. கத் அப்லஹ மன் ஸக்காஹா அவை உண்மைப்படுத்துபவர்களாக இருந்தார்கள். சஹாபாக்கள் எந்த அளவுக்கு உண்மையைக் காட்டினார்கள் எனில் அவர்கள் சிலை வணக்கம் படைப்பின வணக்கம் ஆகியவற்றிலிருந்து முகம் திருப்பியது மட்டுமின்றி அதாவது மக்களிடம் கேட்பது, மக்களை புகழ்ந்து பேசுவது இவற்றிலிருந்து முகம் திருப்பியது மட்டுமின்றி அவர்களின் உள்ளத்திலிருந்து உலகத்தின் தேட்டமே அழிக்கப்பட்டு விட்டது. அவர்கள் இறைவனை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். மிகவும் சுறுசுறுப்பாக இறை வழியில் தம்மை அர்ப்பணித்து விட்டார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் இப்ராஹீம் ஆக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஒரு உடல் எனில் கண்ணியமிக்க சஹாபாக்கள் அதன் உறுப்புகளாக இருந்தனர்.

அல்லாஹ் நம்மை சரியான முறையில் சஹாபாக்களின் அந்தஸ்தை புரிவதற்கு வாய்ப்பு தருவானாக. அவர்களின் முன்மாதிரி படி நடந்து நமது களங்கமின்மை மற்றும் பற்றையும் கூட அதிகரிக்க வாய்ப்பு தருவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
on 09.03.2018
Translated by Muallim M. Nizamuddeen
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516